முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1219

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.01.2023, திங்கட்கிழமை

1. பார்காக்கும் மாதவராஜனே
   பரோபகாரம் நிறைந்த குருராஜனே
   சீர்திருத்தம் பேருலகில் செய்து இனிதே
   சித்திமிகு ஞானவான்களை படைக்க வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
   செப்பிடுவேன் சுபகிருது கலைதிங்கள் தன்னில்
   (சுபகிருது வருடம் தை மாதம் 16 ம் நாள் 30.01.2023, திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கன் நீயே உலகை மாற்றும்
   தனித்துவம் கொண்ட மாதவசியாகும்
   அண்ணலே உன் அன்னதான பலமே
   அகிலத்தை பசிபிணி விரட்டி காக்கும் அருமருந்தாகும்
4. ஆகவே அரங்கன் உன் தொண்டர்படைகள் மூலம்
   அற்புதத்தை ஆறுமுகன் யான் உலகில் நடத்துவேன்
   ஜெகமெங்கும் உன் தர்மம் வளரவளரவே
   சித்திமிகு பாதுகாப்புக் கொண்ட உலகமாக மாற்றும்
5. மாற்றும் ஆறுமுகன் என் தயவால்
   மண்ணுலகம் கண்டு சிறக்க நேரும்
   நேர்மை கொண்ட தொண்டர்களையும்
   நிலவுலகை காக்கும் மாதர்மத்தையும்
6. பெருமைமிக்க படைப்பாக அரங்கன் நீ
   பேருலகில் ஆக்கமுடன் செய்து வர
   வருகவே உன் வல்லமை உலகறியும்
   வறுமை நீங்கி இந்த உலகமே வளம்காணும்
7. தருகின்ற உயர்குணங்கள் உன் ஞானமாக உலகமெங்கும்
   தரணியோர்க்கு பரவி பேரற்புதங்கள் உலகமெங்கிலும் மேன்மை பொருந்திய
   ஞான சூட்சுமமாக மக்களிடை
   நற்குணங்கள் உயர்நிலைகள் எல்லாம் கூடி
8. கூடியே இந்த உலகம் கொலை களவு வஞ்சம்
   கொடுமை தருகின்ற ஊழல் நிலைகள் ஏதுமில்லா
   இடர்தரக்கூடிய செயல்கள் எதுவுமே இல்லாத
   எளிமையும் இனிமையும் பாதுகாப்பும் நிறைந்த
9. நிறைந்தநல் ஞானலோகமாக மாற்றம் பெறும்
   நிலவுலகில் ஆறுமுகன் யான் ஆற்றல்தனை
   வரம்பிலா உந்தனுக்கு நித்தம்நித்தம் வரமாக
   வழங்கியே அரங்கன் உன்வழி அற்புதம் நடத்தி வருகின்றேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–